சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள், மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்கான (Maintenance of equipment and Machinery) நிதி அளவின் உச்ச வரம்பை உயர்த்தி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.153

நாள்: 20.6.2017
ஹேவிளம்பி வருடம், ஆனி 6
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டவை:-

1. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் சுற்றறிக்கை எண்.20132/கே2/1991, நாள் 17.6.1992.
2. அரசாணை (நிலை) எண்.137, உயர்கல்வி (சி2) துறை, நாள் 23.5.2011.
3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.45116/கே1/2015, நாள் 18.1.2016 மற்றும் 12.4.2017.

ஆணை:-

தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ், 10 அரசு பொறியியற் கல்லூரிகள், 36 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 5 சிறப்பு பயிலகங்கள், 3 அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் 34 அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் இயங்கி வருவதாகவும், மேற்படி பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள உபகரணங்கள் மற்றும் கணினிகளை பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்கான (Maintenance of equipment and Machinery) நிதி அளவின் உச்ச வரம்பு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

| வ.எண் | அரசு பயிலகங்கள் | அரசாணை (நிலை) எண்.137, உயர்கல்வித் (சி2) துறை, நாள் 23.5.2011–ன்படி, தற்போதைய நிதி அளவின் உச்சவரம்பு |
|---|---|---|
| 1. | தொழில்நுட்பக் கல்வி ஆணையர் | ரூ.1,00,000/– |

| | | |
|---|---|---|
| 2. | அரசு பொறியியற் கல்லூரி முதல்வர்கள் | ரூ.50,000/– |
| 3. | அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.25,000/– |

| வ.எண் | அரசு நிதியுதவி பெறும் பயிலகங்கள் | தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் சுற்றறிக்கை எண்.20132/கே2/1991, நாள் 17.6.1992–ன்படி, தற்போதைய நிதி அளவின் உச்சவரம்பு |
|---|---|---|
| 1 | அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் | ரூ.25,000/– |

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில், அனைத்துத் தொழில் நுட்பம் சார்ந்த தளவாடங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்கான (Maintenance of equipment and Machinery) தொகைகள் அதிகமாகவுள்ளதாலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில வருடத்திற்கு இருமுறை பட்டயத் தேர்வுகள், வணிகவியல் தேர்வுகள் மற்றும் கம்ப்யூட்டர் ஆபீஸ் ஆன் ஆட்டோமேஷன் தேர்வுகள் நடத்துதல் (தேர்வு நுழைவுச் சீட்டு தயாரித்தல், வினாத்தாள் அனுப்புதல், விடைத்தாள் திருத்தும் பணி, விடைத்தாள் நகல் அளிக்கும் பணி, விடைத்தாள் மறுமதிப்பீட்டு பணி) தேர்வு முடிவுகள் வெளியிடுதல், தேர்வு முடிவுக்கான மதிப்பெண் பட்டியல் மற்றும் பட்டயச் சான்றிதழ், வணிகவியல் சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் தேர்வுகள் தொடர்பான பல பணிகள் தொடர்ச்சியாக இயக்ககத்தில் நடைபெற்று வருவதாலும், இயக்கக கணினிகள், அச்சு இயந்திரங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்கான பணிகளை மேற்கொள்வதில் சில நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டு, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பயிலகங்களின் முதல்வர்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்கான (Maintenance of equipment and Machinery) நிதி அளவின் உச்ச வரம்பினை உயர்த்த வேண்டியது அத்தியாவசியம் என்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களின் முதல்வர்களின் தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்காக (Maintenance of equipment and Machinery)

அளிக்கப்பட்டுள்ள நிதி உச்ச வரம்பினை கொள்முதல் விதிமுறைகளுக்கு உட்பட்டு பின்வருமாறு உயர்த்தி வழங்குமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ.எண் | பயிலகங்கள் | தற்போதைய நிதி அளவின் உச்சவரம்பு | உயர்த்தி வழங்க பரிந்துரைக்கப்படும் நிதி அளவின் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் | ரூ.1,00,000/- | ரூ.3,00,000/- |
| 2 | அரசு பொறியியற் கல்லூரி முதல்வர்கள் | ரூ.50,000/- | ரூ.1,00,000/- |
| 3 | அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்புப் பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.25,000/- | ரூ.1,00,000/- |
| 4 | அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் | ரூ.25,000/- | ரூ.50,000/- |

மேலும், முதல்வர்களின் நிதி உச்சவரம்பிற்கு, மேற்பட்ட இனங்களுக்கு, தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் நிதி ஒப்பளிப்பு ஆணை பெறப்படவேண்டும் என்றும் தெரிவித்து அரசாணை வழங்குமாறும், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களின் முதல்வர்கள், தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பதற்காக (Maintenance of equipment and Machinery) அளிக்கப்பட்டுள்ள நிதி உச்ச வரம்பினை கொள்முதல் விதிமுறைகளுக்கு உட்பட்டு பின்வருமாறு உயர்த்தியும், மேலும் முதல்வர்களின் நிதி உச்சவரம்பிற்கு மேற்பட்ட இனங்களுக்கு, தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் நிதி ஒப்பளிப்பு ஆணை பெறப்படவேண்டும் என்றும் ஆணையிடுகிறது:-

| வ.எண் | பயிலகங்கள் | தற்போதைய நிதி அளவின் உச்சவரம்பு | உயர்த்தி வழங்க பரிந்துரைக்கப்படும் நிதி அளவின் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | தொழில்நுட்பக் கல்வி ஆணையர் | ரூ.1,00,000/- | ரூ.3,00,000/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | அரசு பொறியியற் கல்லூரி முதல்வர்கள் | ரூ.50,000/- | ரூ.1,00,000/- |
| 3 | அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்புப் பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.25,000/- | ரூ.1,00,000/- |
| 4 | அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் | ரூ.25,000/- | ரூ.50,000/- |

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.31362/கல்வி-I/2017, நாள் 15.6.2017-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25.
முதல்வர்கள், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள்.
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

<u>நகல்:</u>

அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை-9.
உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி (கல்வி – I)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

39278

சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள் – புத்தகங்கள் கொள்முதல் செய்ய முதல்வர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உச்ச வரம்பை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.250

நாள்: 5.10.2018
விளம்பி வருடம், புரட்டாசி – 19,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.163, உயர்கல்வித் (சி2) துறை, நாள் 15.7.2011.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.14319/ கே1/2016, நாள் 10.6.2016, 22.8.2016, 12.4.2017 மற்றும் 25.5.2018.

ஆணை:-

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களில் உள்ள நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவதற்காக அக்கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உச்ச வரம்பை அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்குள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரூ.15,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் கீழ்வரும் காரணங்களின் அடிப்படையில், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் புத்தகங்கள் கொள்முதல் செய்வதற்கு அளிக்கப்பட்டுள்ள நிதி உச்சவரம்பினை பின்வருமாறு உயர்த்தி வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண். | பயிலகங்கள் | தற்போதைய நிதி அளவின் உச்சவரம்பு | உயர்த்தி வழங்க பரிந்துரைக்கப்படும் நிதி அளவின் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.50,000/– | ரூ.1,00,000/– |
| 2 | அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரி முதல்வர்கள் | ரூ.25,000/– | ரூ.75,000/– |
| 3 | அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் | ரூ.25,000/– | ரூ.50,000/– |

(i) AICTE ன் விதிமுறைகளின்படி ஒரு பாடப்பிரிவுக்கு 1500 புத்தகங்கள் இருக்கவேண்டும் என்பதுடன், ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட அளவு புத்தகங்கள் கொள்முதல் செய்யவேண்டும் என்ற விதிமுறை நடைமுறையில் உள்ளதால் அதனை அமல்படுத்தி மாணவர்களின் பயன்பாட்டிற்கு நூலக புத்தகங்கள் கொள்முதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

(ii) புத்தகங்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக தற்சமயம் முதல்வர் நிலையில் கொள்முதல் செய்ய ரூ.50,000/- உச்சவரம்பாக உள்ளது. வாங்கப்படும் புத்தகங்கள் யாவும் குறைந்தது 15-20 % தள்ளுபடியில் வாங்கப்படும் சூழ்நிலை உள்ளதாலும், புத்தகங்களின் விலை புத்தகத்தில் அச்சிடப்பட்டிருப்பதாலும் உச்சவரம்பை கூட்டுவதால், இவ்வரம்பிற்குள் உள்ள புத்தகங்கள் முதல்வர் நிலையிலேயே கொள்முதல் செய்யலாம். அப்படி செய்தால், காலவிரயத்தை குறைக்கவும், குறித்த காலத்திற்குள் கொள்முதல் செய்யவும் ஏதுவாக இருக்கும்.

(iii) அனைத்துத் தகவல்களும் கணினி மூலம் பெறப்பட்டு, மாணவர்கள் அவற்றை பயன்படுத்திட போதிய கணினி வசதிகள், Broadband facility உடன் கூடிய Internet வசதிகள் இல்லை. பெரும்பாலான கல்லூரிகள் கிராமப்புறங்களில் அமைந்துள்ளதாலும், Internet facility Charges-க்கு செலவழித்திடும் நிலையில் போதுமான பொருளாதார வசதி, கல்லூரியில் பயின்று வரும் கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு இல்லாததால், புத்தகங்களை சார்ந்து படிக்கவேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர். மேலும், மாணவர்களின் வாசிப்புத் திறனை அதிகரித்து அறிவுத் திறனை மேம்படுத்துவதால், புத்தகங்கள் கொள்முதல் இன்றியமையாததாக உள்ளது.

(iv) மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ள பயிலகங்களில் மின்சார துண்டிப்பு வரும் தருணங்களில் மாணவர்கள் கணினி மூலம் தகவல் பெற இயலாத சூழல் ஏற்படும் என்பதுடன், புத்தகங்கள் கொள்முதல் செய்யும் தருணத்தில் இச்சூழல் முற்றிலும் தவிர்க்கப்படும்.

(v) அனைத்து புத்தகங்களும் (Text Books) முழு அளவில் கணினி மூலம் கிடைப்பதில்லை. மாணவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் உபயோகிக்கும் அளவிற்கு இணையதளவசதியுடன் கூடிய கணினிகள் போதுமானதாக இல்லை. ஆனால், புத்தகங்கள் மூலம் படிப்பதற்கு போதிய வசதிகள் நூலகத்தில் செய்ய இயலும் என்பதனுடன், அதனை உடனடியாக எடுத்து சிரமமின்றி படிக்கவும் இயலும். சில கல்லூரிகளில் நூலகர் பணியிடம் நிரப்பப்படாத நிலையில் E-Journals-மூலம் மாணவர்கள் படிப்பதற்கு உரிய வழிகாட்டி இல்லாத நிலை உள்ளது.

(vi) மிகவும் பின்தங்கிய மாவட்டத்தில் பயிலும் ஏழை மாணவர்களின் வளர்ச்சிக்காக, கல்லூரி துவங்கப்பட்ட நிலையில், கணினி மூலம் அனைத்து விவரங்களையும் பெறக்கூடிய நிலையில் மாணவர்களின் பொருளாதாரச் சூழ்நிலை மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் கல்லூரியில் நூலகப் புத்தகங்கள் கொள்முதல் செய்வது இன்றியமையாததாக உள்ளது.

(vii) கணினி மூலம் e-journals கொள்முதல் செய்வது. ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படவேண்டும். இது ஒரு தொடர் செலவினம் ஆகும். புத்தகங்கள் கொள்முதல் செய்வதால் ஒருமுறை செலவினமாகும் என்பதுடன் அரசுக்கு நிதிச்சுமை குறைய வாய்ப்புள்ளது.

3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட ஆணையினை கருத்தில் கொண்டு, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களில் உள்ள நூலகத்திற்கு மட்டும் புத்தகங்களை வாங்குவதற்காக அக்கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உச்ச வரம்பை அந்தந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்குள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.46846/கல்வி–I/2018, நாள் 26.9.2018–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
முதல்வர்கள், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்,
பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள்.
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (கல்வி–I) துறை,
இருப்புக் கோப்பு / உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.

<u>மேற்குறிப்பாணை எண்.51843/கே1/2021, நாள். 29. 11. 2022.</u>

பார்வை : அரசாணை (நிலை) எண். 242, உயர்கல்வி (சி2)த் துறை, நாள். 04.11.2022.

----

அரசாணையின் (நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

ஒம்./–லெ.மங்களேஸ்வரன்
தொழில் நுட்ப உதவியாளர் (மதிப்பீடு 2)

பெறுநர்

முதல்வர் / முதல்வர் (பொ)
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல்
மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள், சிறப்பு பயிலகங்கள்,

நகல்
1.ஆணையரின் மேஜைக்கு
2.கூடுதல் இயக்குநர் (பாலி)
3.கூடுதல் இயக்குநர் (தேர்வு)
4.நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்
5.உதவி இயக்குநர் (திட்டம்)
6.கண்காணிப்பாளர் – X பிரிவு, H பிரிவு, F பிரிவு, K பிரிவு
7.கே2, கே3, கே4 இருக்கைகள்
8.இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 29/11/22

29/11/22

## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் நவீன ஆய்வக உபகரணங்கள் / கணினிகள் மற்றும் கணினி சார்ந்த பொருட்கள் / அறைகலன்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வது – முதல்வரின் நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்துதல் தொழில் நுட்பக்கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கியது – பின்னேற்பு வழங்குதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

## உயர்கல்வி (சி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.242 நாள்: **04.11.2022.**

சுபகிருது வருடம், ஐப்பசி - 18

திருவள்ளுவர் ஆண்டு - 2053

படிக்கப்பட்டவை:-

---

1. அரசாணை (நிலை) எண்.166,உயர்கல்வி (சி2)த்துறை, நாள் 29.06.2017.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.22542/கே1/2021, நாள் 28.06.2021 மற்றும் 12.08.2022.
3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக சுற்றறிக்கை எண்.51843/கே1/2021, நாள் 01.03.2022.
4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.51843/கே1/2021, நாள் 14.03.2022 மற்றும் 26.07.2022.

---

**ஆணை:-**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தொழில்நுட்பக்

கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு / அரசு நிதியுதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களுக்கு, சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் விதிமுறைகளுக்கு உட்பட்டு வாங்க நிதி அதிகாரஉச்சவரம்பினை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் 14.03.2021 நாளிட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.166, உயர்கல்வி (சி2) துறை, நாள்.29.6.2017-ல் தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களுக்கு, சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் செய்வதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்தி அரசாணை வழங்கிட கோரி 28.06.2021 அன்று அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது என்றும் அரசிடமிருந்து அனுமதி ஆணை எதிர்நோக்கப்பட்ட நிலையில், 2021-2022-ம் நிதியாண்டு முடிவுறும் தருவாயில் இருந்ததாலும், மாணவர்களின் நலன் கருதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை அரசுக்கு சரண் செய்வதை தவிர்க்கும் பொருட்டும், அரசு / அரசுநிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களின் நிதி அதிகார உச்சவரம்பினை பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தி, மூன்றாவதாக படிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்வி இயக்கக சுற்றறிக்கை எண். 51843/கே1/2021, நாள். 1.3.2022-ன் மூலம் தொழில் நுட்பக் கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | பயிலகங்கள் | தற்போதைய நிதி உச்சவரம்பு ரூ. | தற்போது உயர்த்தி வழங்கும் நிதி அளவின் உச்சவரம்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | அரசினர் பொறியியல் கல்லூரிகள் முதல்வர்களுக்கான நிதி உச்சவரம்பு | ரூ.4,00,000/- | ரூ.10,00,000/- |
| 2. | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.2,00,000/- | ரூ.5,00,000/- |
| 3, | அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- |

3. எனவே, இவ்வாறு அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களின் நிதி அதிகார உச்சவரம்பினை உயர்த்தி தொழில் நுட்பக் கல்வி ஆணையர் நிலையிலேயே அனுமதி வழங்கப்பட்ட நிகழ்விற்கு பின்னேற்பு வழங்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்களின் சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் செய்வதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட நிதி அதிகார உச்சவரம்பினை மேலே பத்தி-2ல் காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் நிலையிலேயே உயர்த்தி அனுமதி ஆணை வழங்கப்பட்டதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பின்னேற்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(அ) இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ள முதல்வர்களின் நிதி அதிகார உச்சவரம்பு 5 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

(ஆ) இம்முறையில் ,முன்னேற்றம் மற்றும் உள்ளபடியான செயல்பாட்டின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, அதாவது 2024 - 2025-ல் அடுத்த முடிவு மேற்கொள்ளப்படும்.

(இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் விதிகள், 2000 ஆகியவை முறையாக பின்பற்றப்படவேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அசா.எண். 45916/நிதி (கல்வி-I) / 2022, நாள்.31.10.2022-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை – 600025.
முதல்வர்கள், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும்
பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள்
மற்றும் சிறப்பு பயிலகங்கள்,
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர், வழியாக)
மாநிலக்கணக்காயர், சென்னை – 600018 / 600035.

நகல்

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600009.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,
உயர்கல்வித்துறை, சென்னை - 600009.
நிதி(கல்வி-I) த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600009.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.